# ஏதேனும் செய்யுங்களேன், பெரியோர்களே!

**- Voice of a child…**

உத்ரா துரைராஜன், துறைத்தலைவி, இயற்பியல் துறை,
துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி, அரும்பாக்கம், சென்னை

நகரத்தில் மிகவும் பிரபலமான பள்ளி அது. படிப்பு, பாட்டு, விளையாட்டு, கலை என ஒரே தடபுடல்தான் எப்போதும். கல்வியாண்டு துவங்கி ஒருமாதம்தான் ஆகியிருந்தது. எட்டாம் வகுப்பில், ஆசிரியை வாசித்த அடுத்து வரப்போகும் விளையாட்டுப் போட்டிகள், அறிவியல், கணிதம், ஆங்கிலம் திறனறித் தேர்வுகள், நாடகப்போட்டி பற்றிய அறிவிப்புகள் குழந்தைகளிடையே உற்சாகத்தைக் கூட்டியது. அடுத்து வரும் மாதங்களில் என நீண்டது. கார்த்திக்கும், ஆத்மாவும் நாடகம் என்றதும் துள்ளிக் குதித்தார்கள்.

எல்லாவற்றையும் பற்றி பேச எத்தனைஎத்தனையோ. ஆனால் பாடத்தை முடிக்க வேண்டுமே! ஆசிரியை கணக்குப் பாடத்தைத் துவங்கி விட்டார். இரண்டு

கணக்குகள்கூட முடிந்து மூன்றாவது. எல்லாரும் கப்சிப். அடாடா! இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு கனவிலிருந்து உலகிற்கு வந்தனர். ஆசிரியை போட்ட கணக்கு ஜாங்கிரி ஜாங்கிரியாய் தெரிந்தது. வர்க்கமூலம் கொசு பறப்பதுபோல் தோன்றியது. ஒருவாறு நோட்டில் எழுதியாகிவிட்டது. காத்திருந்த பத்து நிமிட இடைவேளையில், தத்தம் ஹவுஸ்களில் விளையாட்டுக்கென பெயர் தந்தார்கள். விளையாட்டுப் போட்டிகளில் 100மீ ஓட்டம், 50மீ ஓட்டம், கபடி, லெமன் - ஸ்பூன், 200மீ ரிலே. கால்பந்து குழுவில் வேறு இருக்கிறார்களே. சாரணர் குழு உறுப்பினர்களாகவும் சென்ற வாரம் பெயர் தந்து ஞாபகம் வந்தது. நிந்திதா ஒரு அதட்டு போட்டாள். “டேய்! இரண்டு பேருக்கும் மிஸ் சொன்னது கேக்கல? ஒவ்வொருத்தரும் மூணு விளையாட்டுலதான் கலந்துக்கமுடியும். என்னடா செய்றீங்க, வகுப்புல? கவனிக்கவே மாட்டீங்களா?” இரண்டு பேரின் முகமும் வாடியது. இங்கேதானே இருந்தோம். ஏன் நமக்கு

இந்த instructions கேக்கவில்லை என யோசிப்பதற்குள் முண்டிக்கொண்டு எல்லோரும் பெயர் தந்துகொண்டிருந்தார்கள். மூணேமுணு என்றால் எதிலெல்லாம் தர வேண்டும், என இவர்கள் குழம்பிய குழப்பத்தில் அந்தப் பட்டியல் நிறைவாகி இருந்தது. “என்னடா பார்த்துக்கிட்டே இருக்கீங்க? முதல்ல ஓடி வந்திங்க இடைவேளை முடியப்போகுது. சீக்கிரம்”, உலுக்கப்பட்டு, எதில் இடம் காலியிருந்ததோ அதில் பெயர் தந்தார்கள்.

நம்ம குழுதான் பரிசுகளை அள்ளவேண்டும் என ஒலிம்பிக் பந்தய அளவில் இறக்கைகட்டி பறந்தது ஆத்மாவின் கற்பனை, அறிவியல் ஆசிரியர் நோட்டுக் எங்கே என கேட்கும்வரையில்! வீட்டுப் பாடம் முடிக்காமல், அவசர அவசரமாய் காலையில் எழுதி, காலை உணவையும் சாப்பிடாமல் அவசரத்தில் நடந்து, அதே அவசரத்தில் அந்த நோட்டுப் புத்தகத்தை வீட்டில் மேஜைமேல் வைத்துவிட்டு பள்ளிக்கு வந்தது திரைப்படம்

போல் இருந்தது கனவா? நினைவா? வகுப்புக்கு வெளியே தரையில் உட்காரும்போதுதான் அவன் நினைவு திரும்பியது. “சரி! கொஞ்சம் காத்துவாங்கலாம். வாழ்க்கைல இதெல்லாம் சகஜம்பா!” “ஆத்மா, இன்றைய பாடத்தை Classworkல எழுது”, ஆசிரியர் முறைத்தார். “சார், பைல நோட் இருக்கு, பேனாவும் பைக்குள்ள...”. “சரிசரி, எடுத்துக்கிட்டு வெளியேபோய் உட்கார், சீக்கிரம்”. வகுப்பறையே தன்னை திரும்பிப் பார்ப்பதை உணர்ந்தான். அழுகை முட்டியது. இப்போதெல்லாம் அழுகையை நிறுத்த முடியும் அவனால ̇- ஆறாம் வகுப்பில் இருந்ததுபோல் கிடையாது. “சீக்கிரம்டா, நகரு, மறைக்காத, போ”, முதல் மாணவன் பாலுவுக்கு நேரம் வீணாவது சுத்தமாகப் பிடிக்காது. அவனோடு சண்டைபோட்டால் ஆபத்து, நாடகக் குழுத்தலைவன் அவன்தான். நடிப்பு சுத்தமாய் வராது. ஆனால், ஒரு வரி விடாமல் மிகஅழகாய் ஏற்ற இறக்கத்தோடு நாடகம் அறிமுகம் செய்வான். அதிலேயே

பாதி வெற்றி கிடைத்துவிடும். ஆத்மா அவன் பையில் கைவிட்டால், பேனாவைக்கும் pouch காணோம். கைவிட்டு துழாவியதில் பென்சில் கிடைத்தது. கணக்கு வகுப்பில் பயன்படுத்திய பேனா, அது classworkநோட் சப்மிட் செய்யும்போது, அதனுள்ளேயே போய்விட்டது. அறிவியல்நோட் எடுப்பதற்கு பதில் வரலாறு நோட்டை எடுத்துக்கொண்டு சென்றான். வெளியே சென்றபின்தான் அது வரலாறு வீட்டுப் பாடநோட்டு என உணர்ந்தான், அதன் பின்பக்கங்களில் அறிவியல் பாடம் சடசடவென்று எழுதப்பட்டது, படங்களும் வரையப்பட்டன. “எப்படியும் அறிவியல் நோட்டில் மீண்டும் எழுதித்தானே ஆகவேண்டும், வீட்டிற்குப்போய்! இப்போது மெனக்கெடுவானேன்?” “நேற்று வரலாற்று ஆசிரியை வீட்டுப் பாடநோட்டை கேட்டார்களே மதியஉணவு வேளையில் காண்பித்துவிட வேண்டியதுதான். கோபிக்கவே தெரியாத ஒரு மிஸ்,” மணியடித்து ஒருவழியாய் உள்ளே வந்து இருக்கையில் அமர்ந்தான். அடுத்து, ஆங்கிலப் பாடநேரம். அவனுக்கு ரொம்பவும்

பிடிக்கும். மதிப்பெண் குறைவது சின்னச்சின்ன பிழைகளால்தான் என அம்மா கூறுவாள். ஆங்கில ஆசிரியை குழந்தைகளுடைய திறமைக்கு ஏற்ப ஒவ்வொரு பாடத்திற்கும் படம் வரையலாம், கவிதை எழுதலாம், ppt செய்யலாம், நாடகம் போடலாம் என பலவழிகளில் கற்கச் சொல்வார். எல்லாம் புரியும். கேள்விக்கான பதில்கள்கூட நன்றாகவே தெரியும். ஆனால் எழுத உட்கார்ந்தால் ஏனோ உடம்பே வலிக்கிறது, கைவலியில் பேனா விழுந்துவிடுகிறது, மனதில் உள்ள பதில் வார்த்தையாய் வாயில் வருகிறது, ஆனால் விடைத்தாளில் காணாமல் போகிறது. தேர்வின்போது மட்டும் மணித்துளிகள் பறந்தே போகின்றன. ஆனாலும் அவனுக்கு ஆங்கில வகுப்பு பிடிக்கும். கொஞ்சம் கேட்ட உடனேயே, நாடகப் போட்டி பற்றி தயார் செய்ய அனுமதி தந்தார். ஆனால், வகுப்புப் பாட நோட்டை முடித்தவர்கள் மட்டுமே. ஆத்மாவும் கார்த்திக்கும் அவசரஅவசரமாக கொஞ்சகொஞ்சம் விட்டு வைத்திருந்ததை பூர்த்திசெய்து,

கையெழுத்துவாங்கி, கலந்தாடச் சென்றனர், “ஆத்மா, கார்த்திக் காவலாளி வேடம்தான் உங்களுக்கு, சரியா”, இது பாலு. “ஏய்! சுத்த மோசம், நாங்க நல்லாவே நடிப்போம்...”, இது ஆத்மா. “ஆனா வசனத்த சொதப்புவீங்களே. மறந்துட்டு சொந்தமா பேசுவீங்களே..”, என்றான் பாலு. “உனக்கென்ன? நடிப்போம், நல்லா பேசுவோம், சூப்பரா சமாளிப்போம். போன வருடம், சூர்யா, வர்ஷா மறந்தாலும் நாங்க சமாளிச்சு கைத்தட்டல் மட்டுமில்ல, முதல் பரிசையும் வாங்கனது ஞாபகமில்லை?” என்றான் கார்த்திக். “பாருங்க, நான்தான் லீடர். இந்த வருடம், நாமதான் நடுநிலைப் பள்ளியில் எல்லாரைவிடவும் பெரியவங்க. நம்மகிட்ட நிறைய எதிர்பார்ப்பாங்க. அதனால இந்தவாட்டி நிறைய வசனம், வீரமான வசனம் இருப்பதுபோல நாடகம்தான் நமக்கு முதல் பரிசைத் தரும். போனவருடம் மாதிரி என்னால வசனம் குறைச்சலாலாம். போட்டு ரிஸ்க் எடுக்கமாட்டேன்.” “முதல் மதிப்பெண்

எடுக்கும் பாலு இந்த வருடம் நாடகத்திலயும் முதல் பரிசு வந்ததாதான் இவனுக்கு சிறந்த மாணவன் பரிசு கிடைக்கும். அதுதான் வசனமாம் வசனம். நடிக்க தெரியாதவன் எல்லாம் நாடகக் குழுத்தலைவன்" பொறுமினான் ஆத்மா. ‘‘சரிசரி! எங்களால நாடகத்துல கலந்துக்காம இருக்கமுடியாது. எதுவானாலும் நாங்க செய்யறோம்". ஒத்துக்கொண்டார்கள் இருவரும். ஒருவழியாய் மதிய உணவு வேளையில் வரலாற்று ஆசிரியை பார்த்து கையெழுத்து வாங்க ஆசிரியர்கள் அறைக்கும் சென்றான் ஆத்மா. அங்கே கணித ஆசிரியை பார்த்தபின் வெடவெடத்துப் போய், நோட்டை வரலாற்று ஆசிரியையின் மேசைமேல் வைத்துவிட்டு ஒரே ஓட்டம் பிடித்தான். ‘‘வணக்கம் கூட சொல்லத் தெரியல. வாயில என்ன கொழுக்கட்டையா?", ‘‘மரியாதை மங்கிகிட்டே வருது’’, ‘‘போனவருடம் கூட பரவாயில்லை", என்பன போன்ற சப்தங்கள் அவனை மேலும் விரட்டியடித்தன. மைதானத்தில் விளையாடிக்கொண்டிருந்த ஆறுஏழு

வகுப்பினருக்கு இவனைப் பார்த்ததும் ஏக குஷி. அவர்களோடு வியர்த்து விளையாடி சிரித்து, வம்படித்தான். அந்த சுகத்திலேயே எப்படியோ அடுத்துவந்த வகுப்புகளை கடத்தினான்.

மாலை மணியோசை காதுக்கு இனிமை தந்தது மேசையில் இருந்தவற்றை அள்ளிப்போட்டுக் கொண்டு ஓடினான். பதின்மவயதின் படிக்கட்டில் கால்வைக்கும் இந்தப் பிஞ்சுகளின் உலகம் கற்பனைகள் நிறைந்தது. வானம் தன்கைக்குள் என்று நம்புவது, தங்களைக் குழந்தைகள் எனக் கூறும்போது மறுப்பது, அதே சமயம் அரவணைப்பை, பாதுகாப்பை தேடி நாடுவது - பொதுவாக எல்லோருக்குமே இது ஒரு குழப்பமான காலகட்டம்தான். மாற்றங்களைப் பற்றிக் குழம்பும் மனம், எதிர்பார்ப்புகளை திணிக்கும் பெற்றோர்கள், கல்லூரிப் படிப்பிற்குத் தயார் செய்துகொள்ள் கட்டாயப்படுத்தும் நண்பர்களின் பெற்றோர்கள், சிரிக்கக்கூட நேரமற்ற நிலை, விளையாட்டைத் தேர்வுகளும், வீட்டு எழுத்துப்பாடங்களும்

விழுங்கியதில் ஏகக்கோபம், தன்னை பெரிய அறிவாளி என்று முன்பு கூறிய ஆசிரியர்கள்கூட மதிப்பெண்கள் குறையக்குறைய ஒருமாதிரி பார்ப்பதுபோல் பிரமை, ஐ.ஐ.டி.க்கு தயார் செய்துகொள்ளும் சிலர் வெறுமனே பள்ளிக்கு வருவோர் என நண்பர்களுக்குள்ளேயே வேறுபாடு தரும் குழப்பம். குழப்பம், மேலும் குழப்பம் - நம்மால் ஏன் எழுதமுடியவில்லை? அறிவியல் சம்பந்தமாக நல்ல நல்ல யோசனை தோன்றுகிறது, ஆனால் மதிப்பெண் காணோம்! கணக்குப் பாடம் பிடிக்கிறது, ஆனால் தேர்வில் நடுக்கம்! வரலாற்றுக் கதைகள், நாடகங்கள் அல்வா போல், ஆனால் அவல் அளவுகூட மதிப்பெண் காணோம்! எவ்வளவு நேரம்தான் எழுதுவது, மனப்பாடம் செய்வது? யாருக்கும் பதில் சொல்லத்தெரியவில்லை. ஒன்று ஓரேயடியாய் திட்டுகிறார்கள். இல்லை அறிவுரை கூறியே அழ வைக்கிறார்கள். அவர்கள் சொல்வது எனக்குத் தெரிகிறது, புரிகிறது. ஆனால் விளையாடவும் என் உலகில் வாழவுமே பிடித்திருக்கிறது. சின்னச் சின்ன

கேள்விகள், இசையோடு கூடிய மனப்பாடங்கள், கண்ணால் பார்த்த செயல்பாடுகள் எல்லாம் எளிதாய் உள்ளன. ஆனால் எதற்காக பத்திபத்தியாய் எழுத வேண்டும்? சிக்கலான கணக்குகள் வகுப்பில், சொல்லிக் கொடுக்கப்படாத கணக்குளை போட கொஞ்சம் அதிக நேரம் தந்தால் என்ன? க்ளு தந்தால்தான் எவ்வளவு நன்றாக இருக்கும். கணக்குத்தாள் துப்பறிவது போல் இருந்தால்? ஆமாம், என்னுடைய பேனா பென்சில் காணாமல் போகிறதே, வேண்டும் போதெல்லாம் கைக்கு அகப்படவில்லையே, ஏன்? யாராவது என்ன நடக்கிறது என்று சொல்வீர்களா? வீட்டுப்பாடம் எழுத கைவலிக்காதா? வலிக்கவலிக்க எழுதிய பின்னும் கையெழுத்து வாங்க மறந்து விடுகிறேனே? அவர்கள் மீது மோதுவதாய் எல்லாரும் சொல்கிறார்கள். ஆமாம், அவர்கள் ஏன் என் வழியிலேயே வருகிறர்கள்? என்னுடைய புத்தகப்பை, உடை கூட கண்ணுக்குத் தெரியாமல் போகிறது தேடும்போது! ஒருவேளை எனக்குத்தான் கண் சரியாகத்

தெரியவில்லையோ? ஐயோ, அப்படியா? இல்லை, இல்லை. எல்லோரும் திட்டுகிறார்கள், நான் பெரியவன்தானே? ஆனால் என் பொருட்கள் காணாமல் போனால்மட்டும் பெரிய பையன்தானே என அம்மா திட்டுகிறாளே, ஏன்? போர்டில் எழுதுவது பூச்சி பறப்பதுபோல் தோன்றுகிறது. ஆனால் ஆசையாய் ஆசிரியர் அருகில் உட்கார்ந்து எழுதினால் பூச்சிபோல் இல்லையே? கண்ணில் தான் கோளாறோ? இல்லை என்றுதான் முடிவு செய்தோமே, ஏன் சந்தேகம்? கைவேலை பிடிக்கிறது, செயற்பாடுகள் பிடிக்கின்றன. ஆனால், வார்த்தைகள் பயமுறுத்துகின்றனவே, ஏன்? ஆனால் வார்த்தைகள் நடிக்கும்போதுமட்டும் தானாக வருகிறதே, எப்படி அது? படிக்க பிடிக்கிறது. பள்ளி பிடிக்கும். எல்லாரையும் பிடிக்கும், ஆனால் பள்ளிக்குப் போக ஏனோ கோபமாய் வருகிறதே, ஏன்? என்னாலேயே படிக்கமுடியும் என நினைப்பது தவறா? ஆனால் தோல்விகளைப் பார்த்தால், உதவி வேண்டும் என்றும் தோன்றுகிறது. யாராவது எழுப்பி

கேள்வி கேட்டால் என் மண்டை காலியானதுபோல் ஏன் தோன்றுகிறதே? நான் பயந்தாங்கொள்ளி கிடையாதே? எனக்கு என்ன வேண்டும்? யார் என்னைப் புரிந்து கொள்வார்கள்? நான் அறிவாளிதானே? நான் புத்திசாலிதானே? நானும் மேடையேறி பரிசுகள் வாங்கும் நாள் வருமா? எல்லாரும் கைதட்டும் நாள் எப்போது? நான் கவலை இல்லாமல் மகிழ்ச்சியாக இருக்க ஏதேனும் செய்யுங்களேன், பெரியோர்களே! இல்லை, என்பாட்டுக்கு விட்டு விடுங்களேன்.